DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 253 /2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.3 |
| Name | :தமிழ் அமுது |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தொட்டப்பநாயக்கனூரில் குடியிருக்கிறேன். நான் தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிகிறேன். நான் திருச்சியில் கல்லூரி படிப்பு 2ம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த போது 01.12.2019 அன்று மதியம் 12.00 மணியளவில் எனது தகப்பனார் எனது தம்பி தற்கொலை செய்து கொண்டதாக போன் மூலம் தகவல் சொன்னார். உடனே நான் அங்கிருந்து கிழம்பி ஊருக்கு வந்து விட்டேன். நான் தம்பி உடலை உசிலம்பட்டி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். பின்பு பிரேத பரிசோதனை முடிந்து தம்பி உடலை ஒப்படைத்தார்கள். பின்பு எனது தம்பியின் உடலை அடக்கம் செய்து விட்டு மறுநாள் தம்பியின் அஸ்தியை கலைத்து விட்டு வீட்டிற்கு வந்து நான் அவன் புத்தகங்களை பார்த்த போது அவனுடைய ஒரு லாங்சைஸ் நோட்டுபுத்தகத்தில் கடைசி பக்கத்தில் என் சாவிற்கு காரணம் இரவி என்றும், அவன் என்னை கொடுமை செய்தான். அவனுக்கு தண்டனை வாங்கி தரவேண்டும் என்று எழுதி இருந்தான். நான் மேற்படி நோட்டை என் அப்பாவிடம் காண்பித்தேன். அப்பா அந்த நோட்டுப்புத்தகத்தை போலீசாரிடம் ஒப்படைத்தார். 01.12.2019 அன்று மாலை போலீசார் என்னை விசாரித்தார்கள். நோட்டு புத்தகம் கொடுத்த பிறகும் போலீசார் என்னை விசாரித்தார். தற்போது கூறியது போல் தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன்.

**குறுக்கு விசாரணை:**

அஸ்தி கரைக்க நான் சென்றேனா என்றால் சென்றேன். வைகை அணை பக்கத்தில் உள்ள ஒரு ஆற்றில் கரைக்கப்பட்டது. வைகை அணையில் இருந்து காலை 11.00 மணியைபோல் புறப்பட்டு வீட்டிற்கு வந்தோம். வைகை அணைக்கும் எனது ஊருக்கும் சுமார் 20கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். எனது தம்பியின் புத்தக பையில் எத்தனை புத்தகங்கள் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை 5 நோட்டு புத்தகங்கள் தேடியபோது அவன் எழுதி வைத்திருந்தது கிடைத்தது. அந்த நோட்டு புத்தகத்தில் தேதி ஏதாவது குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடவில்லை. அந்த நோட்டுப்புத்தகத்தில் எனது ஆசிரியர் இரவிச்சந்திரன் தான் காரணம் என்று முழு பெயர் எழுதப்பட்டிருந்ததா என்றால் முழு பெயர் எழுதப்படவில்லை ஆசிரியர் என்ற வாசகமும் இடம் பெறவில்லை என்றால் சரிதான். என் சாவிற்கு காரணம் இரவி என்று தான் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

**மறு விசாரணை: இல்லை.**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 09.06.2023
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.